# தோவேக்கு துரோகச் செயல்களுக்கு (துக்க) வெகுமதியளிக்கப்பட்டது

## (21:1–22:22)

*கடல் நீர்களின் வரைபடங்களில் தண்ணீர்களுக்கடியில் மறைவான பாறைகள் உள்ள இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பாறைகள் பயங்கரமான அச்சுறுத்தலாக இருப்பினும், ஒன்றும் அறியாதவை போல் சித்தரிப்பை முன் வைக்கின்றன. இவற்றின் அபாயங்கள் பற்றி சந்தேகம் சற்றுமின்றிச் செல்லும் கடல் மாலுமிகளை செய்தியறிக்கைகள் பல முன்னெச்சரிக்கைப் படுத்துகின்றன. இந்தப் பாறைகள், ஒன்றுமறியாதவர் போன்ற சித்தரிப்பை முன் வைக்கின்றவரும், உண்மையிலோ விஷத் தினாலும் மரணத்தினாலும் நிறைந்துள்ளவருமான "துரோகியான நபருடைய" அபாயம் போன்றுள்ளன.*

*1 சாமுவேலில், ஏதோமியனான தோவேக்கு இப்படிப்பட்ட சூழ்ச்சியை சுருக்கமாய் உரைப்பவனாக இருந்து, இவன் செய்தது போலச் செய்கின்ற எல்லாருக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கிறான்.*

*தோவேக்கு ஏதோமியன் என்று விவரிக்கப்படுகின்றான். இவன் ஒரு இஸ்ரவேலன் அல்ல, ஆனால் ஏசாவின் வம்சத்தில் வந்த புற இனத்தவனா யிருந்தான். தோவேக்கின் இனத்திற்கும் இஸ்ரவேல் இனத்திற்கும் இடையில் விரோதம் நிலவி வந்தது. கல்வி மற்றும் பழக்கவழக்கம் ஆகிய வற்றினால் இவன் வரவிருந்த மேசியாவுக்கு மிகவுயர்ந்த பரிவுகளைப் பகிர்ந்து கொள்ள இயலாதவனாயிருந்தான். தோவேக்கு நோபில் மதச் சடங்கு ஒன்றைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்ததால், இவன் இஸ்ர வேலரின் விசுவாசத்திற்குள் வந்து சேர்ந்த யூதமார்க்கத்தமைந்தவனா யிருந்தான் என்பது உறுதி (21:7). இவன் சவுலின் அரண்மனையில் மேய்ப்பருக்குத் தலைவன் என்ற பட்டத்தைப் பெற்று முக்கியமான நபராயிருந்தான்.*

## இவனுடைய துரோகச் செயல்கள்

தோவேக்கின் துரோகமுள்ள இயல்பு 1 சாமுவேலில் வாசகருக்குத் தெளிவாகின்றது. தாவீது தமது உயிருக்குப் பயந்து ஓடிக் கொண்டிருந்தார், அவர் நோபில் இருந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குச் சென்றார். சீலோவின் அழிவிற்குப் பிறகு சவுல், ஆசரிப்புக் கூடாரத்தையும் அதன் ஆராதனை களையும் நோபிற்கு மாற்றியிருந்தார் என்பது தெளிவு. தாவீதின் வாழ்வு மிகவும் நலிந்து நிலையில் இருந்தது. தேவன் மீது அவர் கொண்டிருந்த விசுவாசம் பலவீனமாயிருந்தது, மற்றும் அவர் தமது சுயபலத்தின் மீது சாய்ந்திருந்தார். அவர் பிரதான ஆசாரியரிடம் பொய் கூறி கோலியாத்தின் பட்டயத்தையும் பரிசுத்த அப்பங்கள் சிலவற்றையும் பெற்றுக் கொண்டார். தோவேக்கை (அடையாளம்) கண்டுகொண்ட பிறகு அவர் நோபை விட்டு அவசரமாய்ப் புறப்பட்டுச் சென்றார்.

தோவேக்கு தனது மதச் சடங்குகளை முடித்த பிறகு நேராகச் சவுலிடம் சென்று இந்த நிகழ்ச்சி முழுவதையும் அவரிடத்தில் அறிக்கை செய்தான். தோவேக்கின் செய்தி முதலில் (சவுலிடம்) தனியாகவும் பிறகு 22:6 முதல் உள்ள வசனங்களின்படி வெளியரங்கமாயும் கூறப்பட்டதென்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். உண்மையான விஷயம் கூறப்படும்படி, ஆனால் அதே வேளையில் இன்னொரு சித்தரிப்பை முன்னிறுத்தும்படி அதைத் திரித்துக் கூறும் வகையில் தோவேக்கு தனது வார்த்தைகளை வடிவமைத்தான் (22:9, 10). இவனது வார்த்தைகள், ஒன்றுமறியாத ஆசாரியர்களை ஆக்கினைக்குட்படுத்தி, ஆசாரியர் குலம்முழுவதையும் இரக்கமின்றிக் கொன்றுபோடும்படி சவுல் கோபம் கொள்ளக் காரண மாயிற்று. பயங்கரமும் இரக்கமற்றதுமான இந்தக் கட்டளையை நிறைவேற்ற அரசரின் ஊழியக்காரர்கள் மறுத்துவிட்ட பொழுது, சவுல் தோவேக்கிடம் திரும்பி "நீ போய் ஆசாரியர்களைக் கொன்று போடு" என்று கூறினார். இவன் அதை நிறைவேற்றினான். தோவேக்கு இதைத் திட்ட மிட்டு, இதைச் செய்து முடிக்கும்படி சவுலைத் தூண்டிவிட்டான், வெறுப்பினிமித்தமாக ஒன்றுமறியாத மக்களைக் கொலை செய்தான், மற்றும் தனது ''வீரத்துவமான'' செயல் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளவும் துணிந்தான்! இதை விட அதிகமாக பெருங்குற்றம் செய்த மிருகத் தன்மை கொண்டவன் ஒருவனை நாம் வேதாகமம் முழுவதிலும் காண முடியுமா? உயிர் பிழைத்த ஒரே ஒருவர் மூலமாக இந்தச் செய்தி தாவீதுக்கு எட்டிய பொழுது, சங்கீதம் 52 எழுதப்பட்டது.

## இவனுடைய துரோக குணத்தின் அடையாளங்கள்

துரோகத்தின் அடையாளங்கள் தோவேக்கின் குணத்தில் பதிந் திருந்தன. தோவேக்கு செய்தது போல நாமும் இவற்றைப் பேணிவிடக் கூடும் என்பதால் இவற்றை நாம் ஜாக்கிரதையாக உற்று நோக்குவோம்.

இவன் தனது நாவை பொறுப்பற்ற வகையில் பயன்படுத்தினான்

*(22:9, 10; சங். 52:2, 4). பிரதான ஆசாரியர் தாவீதைக் கேள்வி கேட்டுச் சோதித்ததைக் கூறத் தோவேக்கு தவறி விட்டான். தோவேக்கு தன் இலக்கிற்குப் பொருத்தமான வகையில் தனது வார்த்தைகளை வடிவமைத்தான், பிரதான ஆசாரியர் மீது மிக மோசமான கருத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இவனது நோக்கமாயிருந்தது! சங்கீதம் 52:2ல், இவன் "கேடுகளைச் செய்ய எத்தனம் பண்ணுகிறான்" என்று நேரடியாகவே கூறப்பட்டுள்ளது. இவன் ஒவ்வொரு வார்த்தையையும் ஜாக்கிரதையாய்த் திட்டமிட்டு கட்டியெழுப்பினான். இவன் ஆசாரியர்களை அழிப்பதற்குத் தனது நாவைப் பயன்படுத்தினான் (22:4). பட்சிக்கிற வார்த்தைகள் பிறருடைய வாழ்வை அழித்துச் சிதைக்கின்ற வார்த்தைகளாய் உள்ளன.*

*துரோகம் செய்கின்ற நபரை ஜாக்கிரதையற்ற நாவு எவ்வளவாய் அடையாளப்படுத்துகின்றது! யாக்கோபு 3:6 வசனமானது, "நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகின்றதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!" என்று கூறுகின்றது. பாவத்தின் சோதனையை பின்பற்றி, பிறரை அழிக்கும் விஷயங்களைக் கூறுவது எவ்வளவு சுலபமானதாக உள்ளது. தோவேக்கு புறங்கூறி, தேவனுடைய மக்களை அழித்தான். நாம் நமது நாவை அடக்கத் தவறுகின்ற பொழுது இவ்விதமான விளைவுகள் ஏற்படுகின்றன (அமெரிக்க) உள்நாட்டு யுத்தத்தில் நம்பிக்கையிழந்து நின்ற ஒரு வேளையில், லிங்கன் தனது தளபதிகளை அழைத்து ஒரு (ஆலோசனை) கூட்டம் நடத்தினார். அவர்களில் ஒருவர் மிக அதிகமாய்ப் பேசுபவராக, அமைதி காக்காதவராக இருந்தார். பேசிக் கொண்டே இருந்த அந்தத் தளபதி அடர் கறுப்பான தலைமுடியும் வெள்ளை நிறத் தாடியும் கொண்டிருந்தார். லிங்கனின் அருகில் இருந்த ஒரு தளபதி, அவர் (பேசிக் கொண்டேயிருந்தவர்) ஏன் வெள்ளைத் தாடியும், கறுப்பான தலைமுடியும் கொண்டுள்ளார் என்று கேட்டார். அதற்கு லிங்கன், "ஏனென்றால், அவர் தன் தலையைக் காட்டிலும் தன் தாடையினால் அதிக வேலை செய்கின்றார்" என்று பதில் அளித்தார். இது, பொறுப்பற்ற பேச்சுக்களில் பங்கேற்கின்ற எல்லாருக்கும் பொருந்துகின்ற உண்மையாக உள்ளது!*

*இவன் சுயத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தான். தோவேக்கு, "இதில் எனக்குள்ளது என்ன?" என கேட்பவனாயிருந்தான். இவன் தன்னையே இந்த அண்டத்தின் மையமாக வைத்துக் கொண்டான். சவுல் சித்தம் கலங்கி தம்மைச் சுற்றியிருந்தவர்களைக் கேள்வி கேட்டார் (22:8). அந்தச் சூழ்நிலையைத் தோவேக்கு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.*

*இங்கு எல்லா துரோகத்திற்கும் ஆதாரமான அஸ்திபாரம் ஒன்றுள்ளது. சுயநலத்தைப் போஷித்துக் கொண்டிருக்கும் போது, நாம் தேவனுடைய கண்ணோட்டத்தை இழந்து விடுகின்றோம். சுயநலம்தான் தோவேக்கை பேராசைக்கு வழிநடத்திச் சென்றது. சவுலின் தயவைப் பெறுவதற்காக இவன் எதை வேண்டுமென்றாலும் செய்யத் தயாராயிருந்தான்! சங்கீதம் 52:7அ வசனமானது. சுயநலமே இவனை உலகப் பிரகாரமான எண்ணத்திற்கு வழிநடத்திற்று என்று வெளிப்படுத்துகின்றது (ரோமர் 1:28).*

*தோவேக்கைப் போலவே சுய(நல)த்தால் மட்டும் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் மக்களை இன்றைய நாட்களில் காண்பது என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது! இவர்கள், தாங்கள் துரோகத்தால் வழிநடத்தப் படுகின்ற உண்மையை காண முடியாதபடி பார்வையற்றுப் போயிருக் கின்றார்கள் (1 யோவா. 2:15; பிலி. 2:4; சங். 52:7ஆ).*

*இவன் ஒரு கோழையாயிருந்தான். "தோவேக்கு" என்ற பெயர் கூச்சமுள்ள அல்லது பயம் நிறைந்த என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது. தோவேக்கு தனது பொல்லாத செயல் செய்யப்பட்ட பிறகு அதைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டான் என்பது உறுதி. சங்கீதம் 52:1 வசனமானது, "பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமை பாராட்டு கிறாய்? தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது" என்கிறது. எவ்வளவாய் வெறுப்பூட்டுகிற விஷயமாக உள்ளது! இவன் தனக்கே மதிப்பைத் தேடிக் கொண்டு, எல்லாரும் காணும்படி தன்னைத்தானே ஒரு மேடையில் வைத்துக் கொண்டான். மேட்டிமை மற்றும் பரிசுத்தக்கேடு என்பவை துரோகியான நபரின் தெளிவான சித்தரிப்பாக உள்ளது. "சுயம்" என்பது தன் மீதே பெருமை கொள்ளும்படி செய்கிறது, மற்றும் தோவேக்கு இதை மிக நன்றாக விவரிக்கின்றான் (ரோமர் 11:25; 12:16).*

*இவன் வெறுப்பினால் நிறைந்திருந்தான். இவன் பரிவிரக்கமோ அல்லது இரக்கத்தன்மையோ இல்லாதவனாயிருந்தான். தோவேக்கு பச்சிளம் பிள்ளைகளின் மீது பரிவற்றவனாக, வயது சென்றவர்களுக்கு மதிப்பளிக் காதவனாக, உயிரைக் குறித்த பயபக்தியில்லாதவனாக இருந்ததைப் புரிந்து கொள்கிற பொழுது, அவனது கொடூரத் தன்மை திகைப்புக்குரியதாக உள்ளது. இவன் ஆசாரியர்களின் ஒன்றுமறியாத் தன்மை குறித்துச் சவுலை வேண்டுமென்றே தவறாக வழிநடத்துமளவுக்கு வெறுப்பினால் நிறைந்திருந்தான்.*

*துரோகச் செயலானது ஒன்றுமறியாதவர்களை மதிப்பதில்லை, ஆனால் சுய(நல)த்தை மட்டும் மதிக்கிறது. துரோகம் செய்யும் நபரின் முதல் இலக்காக இருப்பது சுயலாபமேயாகும். அதில் (சுயலாபத்தில்) இடையூறு ஏற்பட்டால், வெறுப்பானது அழிப்பதற்கு ஒரு வழியைக் கண்டறியும்!*

*இவன் தேவன் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. இவனது ஆராதனையைப் பற்றிய எண்ணப்போக்கில் இவனது நம்பிக்கைக் குறைவு தெளிவாகிறது. ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்தபோதும், இவன் தேவனை விட்டு மிகவும் தூரத்தில் இருந்தான் (சங். 52:7). இவன் (சடங்கு) முறைகளைச் செய்தான், ஆனால் ஆவியைத் தவற விட்டான். இது இன்றைய நாட்களிலும் நடக்கின்றது (1 தீமோ. 2:8ஆ).*

*துரோகம் செய்கின்ற நபர் தேவனைச் சார்ந்திருப்பதில்லை. வெறுப்பை யும் உணர்வற்ற நிலையையும் சேர்த்து வைக்கின்ற மனிதன், தன்னையே தேவன் சார்ந்திருப்பதாக நினைக்கின்றான். துரோகம் செய்யும் மனிதன் தனக்குச் சொந்தமான தர அளவைகளை ஏற்படுத்திக் கொண்டு, அவற்றையே பிரமாணமாக மதிக்கின்றான். துரோகம் செய்கிற மனிதன் அன்பிற்கான தேவனுடைய கட்டளைகளைச் செவிட்டுத்தனமாகவே பெற்றுக் கொள்கிறான்.*

*துரோகம் செய்கிற மனிதன் இரு விஷயங்களில் மகிழ்வடைவதாக சங்கீதம் 52:3ல் சித்தரிக்கப்படுகின்றான்: (1) தேவனுடைய நன்மை என்ற வகையில் தூண்டப்பட்ட ஒழுக்கமுறைமை புறக்கணிக்கப்படுகின்றது மற்றும் (2) தேவனுடைய நீதி கைவிடப்படுகையில் உடன்படிக்கையின் கட்டளை முறிக்கப்படுகிறது.*

## இவனது துரோகத்திற்கான தெளிவான பலன்

*தோவேக்கின் வாழ்க்கை பற்றிய எடுத்துரைப்பு, எல்லாத் துரோகங்களுக்கும் (உரிய) பலன் அளிக்கப்படும் என்பதை வெளிப்படுத்துகிறது (ஓசி. 10:13அ). தோவேக்கின் துரோகம், கடைசியில் பரிதாபமான விளைவுகளைக் கொண்டு வந்தது.*

*இது பாவத்திற்கு இன்னும் சாய்ந்து போகும் பலனைப் பெற்றது (சங். 52:3). பாவத்திற்கு "அடிமைப்படுதல்" என்பது, துரோகம் செய்யும் மனிதனால் தவிர்க்க இயலாததாகி விடுகின்றது. 2 பேதுரு 2:14ம் வசனமானது, "விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டொழியாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்" என்று கூறுகிறது. (இப்படிப்பட்ட) ஒருவர் விரைவில் தம்மை அதிகமான புறங்கூறுதல், கசப்பு, வெறுப்பு முதலியவற்றில் இருக்கக் காண்கின்றார். துரோகம் செய்கிற மனிதன் தேவனைப் புறக்கணிப்பதால் (சங். 52:3), தவறிலேயே விடப்படுகின்றார் (ரோமர் 1:21-24). இது எவ்வளவு கவலைக்குரிய வெகுமதியாக உள்ளது!*

*இது அழிவு என்ற பலனைப் பெறுகிறது (சங். 52:5). தேவனுடைய நியாயத்தீர்ப்பு படிப்படியான சொற்றொடர்களால் விவரிக்கப்படுகிறது. முதலாவது, "தோல்வியுறச் செய்தலும்" பிறகு "நீக்கிப் போடப்படுதலும்" கடைசியில், "நீர்மூலமாகுதலும்" உள்ளன. இவ்விதமாக, வன்மையான, விரைவான, தீர்மானமான மாற்றம் இல்லையென்றால், பரிதாபமான முடிவு வரும் என்று தேவன் நம்மை எச்சரிக்கின்றார் (லூக். 13:3).*

*இது தனிமைப்படுதல் என்ற பலனைப் பெறுகின்றது (22:22). ஒருவரின் குணாதிசயம் வெளிப்படுத்தப்படும், ஒரு காலத்தில் வலிவார்ந்ததாக நினைக்கப்பட்ட புகழ் மறைந்து ஒழிந்து விடும். தோவேக்கு எப்படிப்பட்டவன் என்று தாவீது அறிந்தார், அவனுடன் (எதிலும்) பங்கு பெற அவர் விரும்பவில்லை. இன்றைய நாட்களில் துரோகியான மனிதன் இதே வகையான பதில்செயலைக் கண்டறிகிறான். எவரொருவரும் அவனிடம் இருக்க விரும்புவதில்லை. அவனது சுயநலமான பேராவல், கத்தி-முனை போன்ற நாவு, வலிவான வெறுப்பு ஆகியவை அருவருத்து வெறுக்கச் செய்கின்றன.*

## முடிவுரை

*தோவேக்கிடமிருந்து ஒரு பாடத்தை நாம் கற்றுக் கொள்வது அவசிய மாகும்: சுயநலம் என்பது நமது வாழ்வில் கொண்டுவருவது பேரழிவுக்கான ஓட்டமேயாகும்! தோவேக்கில் நாம் ''பார்வையற்ற பேராவலின்'' பயங்கரத்தைக் கண்டறிகிறோம். இந்த உலகில் முன்னணியில் இருப்பதற் காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருப்பவர்களுக்கு சொல்லொண்ணாத அழிவு காத்துள்ளது. "பார்வையற்ற பேராவல்" என்பது, தோவாக்கு செய்ததைப் போல போர்வையணிந்த சுத்தமான சுயநலமாக மட்டுமே உள்ளது. தோவேக்கு வெற்றி பெற்றதாகத் தோன்றியது - இவன் அரசரின் அங்கீகாரம், முன்னேற்றம் முதலியவற்றைப் பெற்றுக் கொண்டான், ஆனால் அது ஒரு சிறிய காலமே இருந்தது. பிறகு இவன் நம்ப இயலாத வேதனை, பொல்லாங்கு, மற்றும் ஆழமிக்க பாவம் ஆகியவற்றின் அறுவடையைக் கண்டான் (சங். 52:5).*

*வாழ்கின்ற யாவருக்கும் வாழ்வானது இரண்டு தேர்ந்து கொள்ளுதல் களைக் கொண்டுள்ளது. நாம் தேவனுடன் வாழ்ந்து, (வாழ்வின்) எல்லாத் துறைகளிலும் அவரது வசனத்திற்குக் கீழ்ப்படியலாம். (அப்போது) நாம் செல்வமும் புகழும் பெறாமல் போகலாம், ஆனால் நாம் நிறைவடைந் திருப்போம். சங்கீதம் 52 பின்வரும் வசனங்களுடன் முடிவடைகின்றது:*

> *நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன். நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன்; உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது (சங். 52:8, 9).*

*அல்லது, நாம் தேவனின்றி, சுயத்தில் நம்பிக்கை கொண்டு நமது துரோகத்தின் கனிகளை அறுவடை செய்யும் வகையில் வாழலாம். உலக உருண்டையின் குறுக்கே எண்ணற்ற மனிதர்கள் தங்கள் படைகளுடன் சிலைகளை நிறுவியும், நாடுகளை வடிவமைத்தும், விரோதிகளை வென்றும் ஓடோடியுள்ளனர். இவர்கள் உண்மையில் "பலம் வாய்ந்த" மனிதர்கள் அல்லர். இவர்களின் தோல்வி எப்பொழுதும் வரும், இவர்களின் வரலாறு மறதியில் தேய்ந்து போகும். ஆனால் நீதிமானான மனிதர் என்றைக்கும் வாழ்வார்.*

*ஒரு எழுத்தாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''மனித குலம் கீழ்ப்பட்டிருக்கக் கூடிய எல்லாக் குற்றங்களிலும் துரோகம் என்பது மிகவும் வெறுத்து ஒதுக்கக் கூடியதாக உள்ளது, இது வஞ்சகம், கோழைத்தனம் மற்றும் பழிவாங்குதல் ஆகியவற்றின் கூட்டுச் சேர்க்கையாக உள்ளது.'' மாபெரும் தவறுகள் கூட துரோகத்தை நியாயப்படுத்த இயலாது, ஏனென்றால் இது நமது சமுதாயம் நிலைநிற்க உதவுகிற நம்பிக்கை, பாதுகாப்பு ஆகியவற்றை அழிக்கின்றது. கிறிஸ்தவம் புண்படுத்துதல்களை மன்னிக்கும்படி நமக்குப் போதிக்கிறது, ஆனால் அவற்றை நட்புறவு மற்றும்*

*உபகாரம் என்ற போர்வையின் கீழ் கடுஞ் சீற்றத்துடன் மறைத்துக் கொண்டு இருத்தல் என்பது பொதுவான பண்புச் சீர்குலைவை எடுத்துரைப்பதாக உள்ளது, இது நீதியை அவமானத்துக்கு உள்ளாக்குகின்றது!*

*"நாயை நாய் உண்ணும்" நமது சமுதாயத்தில் மற்றும் "குரல் வளையை அறுக்கும்'' நம் வியாபாரக் கொள்கைகளில்/தத்துவங்களில், எல்லாக் கிறிஸ்தவர்களும் ஏதோமியனான தோவேக்கை நினைத்துப் பார்த்து, மேம்பாடுகளில் முந்தியிருப்பதற்காக துரோகத்தை ஒரு வழிமுறையாகப் பயன்படுத்துவதில்லை என்று முடிவெடுப்போமாக. துரோகம் என்பது முடிவில் ஒருவர் செலுத்த வேண்டியதாயுள்ள விலைக்குத் தகுதி வாய்ந்தது அல்ல!*